[1974 சனவரி 19

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்த சைவ ஹோட்டல்களைவிட அசைவ ஹோட்டல்களில் விலையேற்றம் அதிகமாக இருக்கிறது. அதே அடிப்படையில் சில பண்டங்களின் விலைகள் குறைந்திருந்தாலும், முதலில் ஏறிய விலை மறுபடியும் இறங்கவே யில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே இதைத் தவிர்ப்பதற்காக அவர்களோடு மறுபடியும் கலந்து பேசி கடுமையான நடவடிக்கைகளை எடுக்க முன்வருமா? இல்லையென்றால் நியாய விலைக் கடைகளை வைப்பதைப்போன்று ஹோட்டல்களிலும் நியாய விலை ஹோட்டல்களைத் துவக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அசைவ ஹோட்டல்களைப் பற்றிச் சொன்னார்கள். நாம் கட்டுப்படுத்த முடிந்தவைகளைத்தான் கட்டுப்படுத்த முடியும். இன்றைக்கு ஆட்டிறைச்சியையோ, மீனையோ நாம் கட்டுப்படுத்திய விலையில்—கொடுக்க முடியவில்லை. ஆகவே எந்தெந்த சீசனில் கிடைக்கிறதோ அப்பொழுது விலை குறைவாக இருக்கிறது. கிடைக்காத சீசனில் விலை அதிகமாக இருக்கிறது. ஆனாலும் எல்லாவற்றையும் நியாயமான விலையில் கிடைக்கச் செய்ய இறைச்சி விற்பனையாளர்களைக் கூட்டிப்பேசி கூட்டுறவுத் துறையிலே இறைச்சியை விற்க வேண்டுமென்றுகூட முடிவு செய்திருக்கிறோம். அதற்காக நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சபாநாயகரவர்களே, ஹோட்டல்களில் 'சப்சிடைஸ்ட்' முறையில் உணவுப் பண்டங்களை கொடுக்க ஏற்பாடு செய்தால் குறைந்த விலையில் கிடைக்கும் நிலைமை ஏற்பட முடியும். எனவே அம்மாதிரி திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, உலகத்திலே இப்படிப்பட்ட திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஒரு திட்டத்தைப்பற்றி இனிமேல்தான் யோசிக்க வேண்டும்.

திரு. கு. பெரியசாமி : தலைவரவர்களே, உணவுப் பண்டங்களின் விலைகளைப்பற்றி சர்ச்சை செய்கிறோம். ஹோட்டல்களில் இட்லி, தோசை, வடை போன்றவற்றின் எடைகளை நிர்ணயித்து ஒரு இட்லி இத்தனை கிராம் இருக்க வேண்டும், ஒரு வடை இத்தனை கிராம் இருக்க வேண்டும் என்று நிர்ணயிப்பதற்கு அரசு ஆலோசிக்குமா?